சொல்லுவார்களானால், அது ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல, இதை நிராகரிக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி என் கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் அவருடைய கருத்தினைத் தெரிவிப்பார்கள்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் இருக்கும் பக்கமே டி.வி.யை அதிக நேரம் திருப்பாமல் தயவு செய்து எங்கள் பக்கமும் திருப்பினால் நன்றாக இருக்கும். எனவே விவாதத்தைச் சுருக்கமாக எல்லோரும் முடித்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டி.வி.யை எல்லாப் பக்கமும் திருப்புவார்கள். எல்லாப் பக்கமும் திருப்பிப் படம் எடுப்பார்கள். ஆனால் நாளைக்குப் போட்டுப் பார்த்தால் தான் எதைப் போடுவார்கள் என்று தெரியும்.

(திருமதி சத்தியவாணிமுத்து எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் அவருடைய கருத்தைத் தெரிவித்த பிறகு பின்னால் விளக்கம் வேண்டுமென்றால் பேசலாம். அமைச்சரவர்கள் விடை அளிக்கட்டும்.

DR. H. V. HANDE : Point of order, Sir, a lady member, an Ex-Minister wants to participate in the discussion. I just want to know whether it would be in order to prevent her from participating in the debate.

திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே. . . .

(5) அறிவிப்பு

காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டுப் பிரதிநிதிகள் சட்ட மன்றப் பேரவைக்கு வந்திருப்பது குறித்து

MR. SPEAKER : Some of the Parliamentary delegates, who attended the Commonwealth Parliamentary Conference held recently at New Delhi had come to Tamil Nadu. They are now in the Visitors' Gallery watching the proceduings of the House. On behalf of this august body and myself, I have great pleasure in extending a warm welcome to them. (cheers)